2006 ஆகஸ்ட் 29]

செய்யப்பட இருக்கிறது. அதற்குப் பின்னர், இதுபற்றிய கருத்துருக்கள் ஏற்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

120—

மீனவர் பயிற்சிப் பள்ளி

***1482—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர் பயிற்சிப் பள்ளி அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், ஏற்கெனவே நான்கு இடங்களில் மீனவர் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில், மீனவர் பயிற்சிப் பள்ளி அமைத்துத்தர திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு, இயற்கையாக அமைந்த மீன் பிடித் துறைமுகம். எல்லா வசதிகளும் அமைந்துள்ளன. அண்மையில் கடல் வசதியுள்ளது. தூரத்திலும் ஆழமான கடல் வசதி உள்ளது. நிறைய மீனவக் கிராம மக்கள்தொகை கொண்ட, மீனவர் கிராமங்கள் உள்ளன. மீன்பிடித் தொழிலுக்குரிய வலை பின்னுதல். கடலில் படகுகள் தொழிலுக்குப் போகும்போது, இயந்திரக் கோளாறு போன்றவை ஏற்படுகிறபோது, அவசியம் பயிற்சி தேவைப்படுவதால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், மீண்டும் மறுபரிசீலனை செய்து, சீர்காழி தொகுதி, பழையாறில் மீனவர் பயிற்சிப் பள்ளியை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், தூத்துக்குடி, மண்டபம் மற்றும் குளச்சல் ஆகிய நான்கு இடங்களில் மீனவர் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் பயிற்சிக்கான மீனவர்களைத் தேர்ந்தெடுத்து, ஜனவரி முதல் அக்டோபர்வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இந்த நான்கு மீனவர் பயிற்சி நிலையங்களிலும், நவீன மீன்பிடிப்பு மற்றும் சிறுதர கம்மியர் போன்ற சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்வதைப்போல, நம்முடைய பழையாறு பகுதி மீனவர்கள் நிரம்ப இருக்கக்கூடிய பகுதி. ஆகவே, அவர்கள் சொல்கின்ற அந்தக் கோரிக்கையை, துறையின் அதிகாரிகளோடு பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, எப்போதும் கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறீர்கள். கை வலிக்கப்போகிறது. (குறுக்கீடு) திரு. தி.க. ராஜா. (குறுக்கீடு) திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்போரூர் தொகுதியில், கோவளம் பகுதியானது, மீன் வளத்திற்கு மிகவும் பெயர் பெற்ற ஊர். அங்கு மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது குறித்து துறை அதிகாரிகளோடு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]